பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 04 2024 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மக்களவைக்கு மூன்றாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப்படுகிறது.

2. காங்கிரஸ் அரசு கைவிட்ட நீண்டகால பிரச்சினைகளுக்கு கடந்த பத்து ஆண்டுகால தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் தீர்வு காணப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. பிஜேபி ஆட்சியில் சாமானிய மக்கள் விலைவாசி உயர்வு மற்றும் வேலையின்மையால் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

4. வெப்பத்தின் தாக்கம் குறித்து பொதுமக்களுக்கு ஊடகங்கள் வாயிலாக முன்னறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்று மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணிக்கு எதிராக ஆட்டத்தில் மும்பை அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மக்களவைக்கு மூன்றாவது கட்ட தேர்தல் நடைபெறவுள்ள 94 தொகுதிகளுக்கான அறிவிக்கை இன்று வெளியிடப்படுகிறது.

இதையடுத்து மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள பத்து மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட தொகுதிகளில் இன்று வேட்புமனு தாக்கல் தொடங்குகிறது.

இந்த தொகுதிகளில் இம்மாதம் 19-ஆம் தேதி வரை மனு தாக்கல் செய்யலாம்.

வாக்குப்பதிவு அடுத்த மாதம் ஏழாம் தேதி நடைபெறும் என்ற தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதனிடையே முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் பிரச்சாரம் நிறைவடைய இன்னும் ஐந்து நாட்களே உள்ள நிலையில் பிரச்சாரம் தீவிரமான கட்டத்தை எட்டியுள்ளது.

தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் இந்த தொகுதிகளில் முகாமிட்டு தங்களது கட்சி மற்றும் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி நேற்று ராஜஸ்தான் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

காங்கிரஸ் அரசு கைவிட்ட நீண்டகால பிரச்சினைகளுக்கு கடந்த பத்து ஆண்டுகால தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் தீர்வு எட்டப்பட்டதாக அவர் கூறினார்.

நாட்டிலிருந்து வறுமையை அகற்ற வேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்பு காங்கிரஸ் கட்சி கூறியபோதிலும் அதற்கான நடவடிக்கைகளை அக்கட்சி எடுக்கவில்லை என்று குற்றம்சாட்டினார்.

ஆனால் பிஜேபி ஆட்சிக் காலத்தில் 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

விவசாயிகள் வளம்பெற தேவையான நடவடிக்கைகளை எடுத்ததும் பிஜேபி தலைமையிலான அரசுதான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூதத் தலைவர் திரு ராகுல்காந்தி, மத்தியில் பிஜேபி தலைமையிலான ஆட்சியில் பருப்பு, கோதுமை மாவு, எண்ணெய், பெட்ரோல், டீசல் உட்பட அனைத்து பொருட்களின் விலைகளும் பல மடங்கு உயர்ந்துவிட்டதாகக் குற்றம்சாட்டினார்.

இதன் காரணமாக பணவீக்கம் உயர்ந்தது என்றும், சாமானிய மக்கள் விலைவாசி உயர்வு மற்றும் வேலையின்மையால் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஏழை குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் அல்லது மாதத்திற்கு எட்டாயிரத்து 500 வழங்கப்படும் என்றும், இதன்மூலம் வறுமையை ஒழிக்க முடியும் என்றும் திரு ராகுல்காந்தி கூறினார்.

**[]<<<>>>[]**

மத்தியில் ஐ என் டி கூட்டணி ஆட்சி அமைத்தால் திருநெல்வேலி ரயில்வே கோட்டம் தனியாக உருவாக்கப்படும் என்று திமுக இளைஞரணி தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், சமையல் எரிவாயு விலையை மத்திய அரசு பல மடங்கு உயர்த்திவிட்டு, தேர்தல் வருகிறது என்பதற்காக விலையை குறைத்ததாகக் குற்றம்சாட்டினார்.

மாநில அரசின் உரிமைகளை மீட்க திமுக பாடுபடும் என்றும் அவர் கூறினார்.

திருநெல்வேலி மாநகரில் போக்குவரத்து நெரிசலை போக்குவதற்கு தேவையான பாலங்கள் கட்டப்படும் என்றும் திரு உதயநிதி தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஐ என் டி கூட்டணியில் உள்ள கட்சிகள் முரண்பாடான கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், இம்மாவட்டத்தில் விவசாயமும், நெசவுத் தொழிலும் நலிவடைந்து விட்டதாகக் கூறினார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்கள் இரண்டு முறை தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், தேவையான அளவுக்கு பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டதாகவும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

[]<<<>>>[]

இனி தேர்தல் களம்,

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது விருதுநகர் மக்களவைத் தொகுதி

[]<<<>>>[]

நாடு முழுவதும் முதல் முறை வாக்காளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழகத்திலும் இதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

திருப்பத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல்முறை வாக்காளர் நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்காக கட்டாயம் வாக்களிப்போம் என்று உறுதியேற்பதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வெப்பத்திலிருந்து மக்களை பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில் இம்மாதம் முதல் ஜூன் மாதம் வரை வானிலை முன்னறிவிப்புகளை பிரதமருக்கு அதிகாரிகள் விளக்கினர்.

நாட்டின் மத்திய பகுதியிலும், மேற்குப்பகுதியிலும் இயல்புக்கு அதிகமாக வெப்பத்தின் தாக்கம் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

எனவே கோடை காலத்தில் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய மருந்துகள், உப்புக்கரைசல் தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்துதர வேண்டுமென்று பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

வெப்பத்தின் தாக்கம் குறித்து தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் அந்தந்த மாநில மொழிகளில் முன்னறிவிப்புகளை வெளியிட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த பணிகளை மத்திய மாநில மற்றும் மாவட்ட அளவிலான அரசு நிர்வாகங்கள் இணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்றும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்.

கோடைக் காலத்தில் வனப்பகுதிகளில் ஏற்படும் காட்டுத்தீயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

போரினால் பாதிக்கப்பட்ட காஸா பகுதியில் பாலஸ்தீன மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைப்பதை இஸ்ரேல் உறுதி செய்ய வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இந்தியாவுக்கான பிரிட்டனின் புதிய ஹை-கமிஷனராக திருமதி லிண்டி காமிரான் நியமிக்கப்பட்டுள்ளார்.

[]<<<>>>[]

நேபாளத்தில் நீர்மின் திட்டம் உள்ளிட்ட துறைகளில் முதலீடு செய்ய முன்வருமாறு இந்திய வர்த்தகர்களுக்கு அந்நாட்டு அரசு அழைப்பு விடுத்துள்ளது.

[]<<<>>>[]

இந்திய மக்கள் விடுதலை முன்னணி என்ற தீவிரவாத அமைப்பை மீண்டும் ஏற்படுத்த முயன்றதாக ஒருவரை ஜார்க்கண்டில் தேசிய புலனாய்வு முகமை கைது செய்துள்ளது.

[]<<<>>>[]

கஷ்மீர் பள்ளத்தாக்கில் தடை செய்யப்பட்ட லஷ்கர்-ஈ-தொய்பா தீவிரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்ததாக மூன்று பேரை பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

[]<<<>>>[]

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல். நுண் பார்யைாளர்களுக்கான பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டம் கூடலூரில் ஒரு வீட்டில் பணம் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக வந்த தகவலை அடுத்து, வருமான வரித்துறையினர் நேற்று சோதனை மேற்கொண்டனர்.

[]<<<>>>[]

தென்காசி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையையொட்டி உள்ள பகுதிகளில் வெய்யில் வாட்டி வந்த நிலையில், நேற்று மாலை அம்மாவட்டத்தின் பல பகுதிகளில் மழை பெய்ததை அடுத்து வெப்பம் தணிந்து இதமான சூழல் நிலவியது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற பெங்களூரு அணிக்கு எதிராக ஆட்டத்தில் மும்பை அணி ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் எட்டு விக்கெட் இழப்புக்கு 196 ரன் எடுத்தது.

197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மும்பை அணி 15 புள்ளி மூன்று ஓவரிலேயே மூன்று விக்கெட் மட்டுமே இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

இன்று லக்னோவில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நாக்-அவுட் சுற்று போட்டிகள் இம்மாதம் 19, 20 தேதிகளில் நடைபெறவுள்ளது.

அரை இறுதி ஆட்டங்கள் இம்மாதம் 23-ஆம் தேதி தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டி அடுத்த மாதம் நான்காம் தேதி நடைபெறுகிறது.